## புதுச்சேரி அரசு
## வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை

வருவாய் - நிலம் கையகப்படுத்துதல் - "புதுச்சேரி, லாஸ்பேட்டையில் 110/22 கி.வா. வாயு காப்பிடப்பட்ட துணை மின் நிலையம் அமைப்பது" என்ற பொது நோக்கத்திற்காக, புதுச்சேரி மாவட்டம், உழவர்கரை வட்டம், 38 - சாரம் வருவாய் கிராமத்தில் 00.05.80 H.A.C., பரப்பளவுள்ள நிலத்தினை கையகப்படுத்துதல் - 2013 ஆம் ஆண்டு நிலம் கையகப்படுத்துதல், மறுவாழ்வளிப்பு மற்றும் மறுகுடியமர்வில் நேரிய சரியீடு மற்றும் வெளிப்படைத்தன்மை உரிமை சட்டத்தின் கீழான பரிந்துரை - தொடர்பாக.

---

**எண்.1077/வரு/பி1/2024** **புதுச்சேரி, தேதி** 2 9 MAY 2025

<u>2013 ஆம் ஆண்டு நிலம் கையகப்படுத்துதல், மறுவாழ்வளிப்பு மற்றும் மறுகுடியமர்வில் நேரிய சரியீடு மற்றும் வெளிப்படைத்தன்மை உரிமை சட்டத்தின் 8(2) ஆம் பிரிவின் கீழ் அரசின் முடிவு.</u>

2013 ஆம் ஆண்டு நிலம் கையகப்படுத்துதல், மறுவாழ்வளிப்பு மற்றும் மறுகுடியமர்வில் நேரிய சரியீடு மற்றும் வெளிப்படைத்தன்மை உரிமை சட்டத்தின் 8(2) ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களை செலுத்தி, புதுச்சேரி அரசானது, அனைத்து காரணிகளையும் முறையாக கருத்தில் கொண்டு "புதுச்சேரி, லாஸ்பேட்டையில் 110/22 கி.வா. வாயு காப்பிடப்பட்ட துணை மின் நிலையம் அமைப்பது" என்ற பொது நோக்கத்திற்காக புதுச்சேரி மாவட்டம் 38 - சாரம் வருவாய் கிராமத்தில் கீழ்குறிப்பிட்ட அட்டவணையில் கண்டுள்ள நிலத்தினை கையகப்படுத்த முடிவு செய்கிறது.

**<u>அட்டவணை</u>**

**வட்டம் : உழவர்கரை** **வருவாய் கிராமம் : 38 - சாரம்**

| வ. எண | மறு அளவை எண். | நிலத்தின் வகை | நில உரிமையாளர்கள் / அக்கறையுள்ள நபர்களின் பெயர் | கையகப்படுத்தப்படும் நிலத்தின் பரப்பளவு (H.A.Ca.) |
|---|---|---|---|---|
| 1 | 217/3pt. | தரிசு | ஸ்ரீ திரௌபதியம்மன் கோவில் தேவஸ்தானம், தற்கால தர்மகர்த்தா லாஸ்பேட், புதுச்சேரி | 0.05.80 |
| | | | **மொத்தம்** | **0.05.80** |

//துணைநிலை-ஆளுநரின் ஆணைப்படி//

(குலோத்துங்கன். அ, இ.ஆ.ப.,)
அரசு சிறப்பு செயலர் (வருவாய்)